நகராட்சி அலுவலகம்,
விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.
நாள் 12/05/2023

## அவசரக் கூட்டம்

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம் எதிர்வரும் **2023**ம் வருடம் **மே மாதம் 15 ம் தேதி திங்கட் கிழமை காலை 10.30** மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற அவசரக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**பொருள் எண்.1**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண் 2652/22/அ3 நாள் 03.05.2023 ல் கடிதத்தில், நகராட்சிகளில் 2022-23 ம் ஆண்டிற்கு நிர்வாக அனுமதி தயார் செய்து, அதற்கான மன்ற ஒப்புதல் பெற்று அனுப்ப அறிவுறுத்தப்பட்டுள்ளதின் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி 2022-23 ம்ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு**

மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 280 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக நகர்மன்றத் தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் TN76 T 9612 ல் பழுதான பேட்டரியினை மாற்றம் செய்து புதிய பேட்டரி பொருத்திக் கொடுக்கும் வகைக்கு வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| Sl.No | Item & Description | Qty | The Imperial Battery Company, Tirunelveli | Ramki Battery Works, Tirunelveli | SunPower System, Tirunelveli |
|---|---|---|---|---|---|
| 1 | Exide EEZY 70ah | 1 nos | Rs.7700/-<br>+ GST 28% | Rs.8000/-<br>+ GST 28% | Rs.8300/-<br>+ GST 28%) |

**அலுவலகக்குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கெடுத்துள்ள The Imperial Battery Company, Tirunelveli, என்பவரின்விலைப்புள்ளியை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்தமைக்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 281 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம்எண் TN76 AW 3579 அலுவல் பணி நிமித்தமாக உயர்நீதி மன்றம் மதுரை கிளைக்கு சென்று கொண்டு இருக்கும் போது, வாகனத்தின்ஏற்பட்ட திடீர் பழுது காரணமாக வாகனத்தை இயக்க முடியாத நிலை ஏற்பட்டது. ஆணையாளர் அவர்களின் ஈப்பு வாகனம் என்பதால், அதன் அருகாமையில் இருந்த, மகந்திரா கம்பெனி டீலர் பணிமுணையான PPS Motors Pvt Ltd, விருதுநகர் என்ற நிறுவனத்தில் வாகனத்தை பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது., அதற்கான செலவினத் தொகை ரூ.53886/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு

அலுவலகத்தில் உள்ள ஆணையாளர் அவர்களின் ஈப்பு வாகனம் என்பதாலும், பணி நிமித்தமாக சென்ற போது திடீர் பழுது காரணமாக வாகனம் பழுதுடைந்து நின்றதாலும், அவசரம் மற்றும் அவசியம் கருதி அருகாமையில் உள்ள மகேந்திர கம்பெனி டீலர் PPS Motors Pvt Ltd, விருதுநகர் நிறுவனத்தில் பழுதுகளை சரிசெய்த வகைக்கும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்தமைக்கும் , மன்றஅனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்,.

**தீர்மான எண் : 282 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

பொருள் எண்.4

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண் 99/செ.ம.தொ/2023 நாள் 26,04,2023 ன் படி, தினகரன் நாளிதழில் இரண்டு ஆண்டு சாதனை சிறப்பு மலர் வெளியிடவுள்ளதாகவும், அதற்கு அரசுத்துறை தங்களது நிதிநிலமைகேற்ப விளம்பரம் வெளியிட அறிவுறுத்தப்பட்டுள்ளதின் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி சார்பாக தினகரன் நாளிதழில் இரண்டாண்டு சாதனை சிறப்பு மலரில் விளம்பரம் வெளியிட்ட வகைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.19656/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு

அலுவலகக்குறிப்பு

நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, விளம்பரம் செய்தமைக்கும், பட்டியல் தொகையினை இந்நகராட்ச பொது நிதியில் இருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 283 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

பொருள் எண்.5

15வது நிதிக்குழு மான்ய நிதி 2022-23 ன் கீழ் ரூ.69.00 இலட்சத்திற்கு தார் சாலை அமைக்கும் பணி மேற்கொள்ளும் பொருட்டு ஓப்பந்தப்புள்ளி அறிவிப்பினை ஓப்பந்தப்புள்ளி நடைமுறைகளின் படி, மாவட்ட அளவிலான செய்தி தாழில் விளம்பரம் செய்ய வேண்டி, திருநெல்வேலி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் மூலமாக வெளியீட்டு ஆணை எண் 49/செ.ம.தொ.அ/திலி/2023 நாள் 25.04.2023 ன் படி, மதுரை மணி நாளிதழில் வெளியிட்ட வகைக்கு பட்டியல் தொகை ரூ.14818/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிடவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

அலுவலகக்குறிப்பு

ஓப்பந்தப்புள்ளி நடைமுறைகளின் படி, மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை அலுவலர் மூலம் ஓப்பந்தப்புள்ளியினை விளம்பரம் செய்த வகைக்கு பட்டியல் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 284 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

பொருள் எண்.6

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் கீழ்க்கண்ட விவரப்படியான சாலைகளில் நிலத்தடி ஒளி இழை வழித்தட இணைய இணைப்பு அமைக்க வேண்டி, ஜியோ டிஜிட்டல் பிரைவேட் லிமிடட் சென்னை நிறுவனத்தின் மூலம் அனுமதி வேண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக கடிதம் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | சாலையின் விவரம் | நீளம் மீட்டரில் |
|---|---|---|
| 1 | முப்பிடாதியம்மன் கோவில் தெரு | 520 |
| 2 | கீழ ரத வீதி | 100 |
| 3 | பழைய ஆபீஸ் தெரு (சன்னதி தெரு) | 25 |
| | மொத்தம் | 645 |

மேற்கண்ட சாலைகளில் ஒளி இழை வழித்தட ம் அமைக்க வேண்டி, சாலை பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி, பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 816000/- மட்டும் இந்நகராட்சிக்கு செலுத்த கோரி கேட்பு அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பர்வைக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் பார்வையிட்டு அனுமதி வழங்கலம்.

**தீர்மான எண் : 285 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்.7</u>**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சிக்குட்பட்ட, தலையணை நீரேற்று நிலையம், பொதிகையடி தூய நீரேற்று நிலையம், டாணா மேல்நிலை நீர் தேக்கத் தொட்டி, வம்பளந்தான் பாறை,ஒட்டன்குளம் மற்றும் பழை பாபநாசம் சாலையில் உள்ள உரை கிணறு ஆகிய நீரேற்று நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள மின்மோட்டர்களான, 100 ஹெச்பி, 75 ஹெச்பி, 40ஹெச்பி, 25 ஹெச்பி, 10 ஹெச்பி, 7.5 ஹெச்பி, 5 ஹெச்பி, 3 ஹெச்பி மின்மோட்டர்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை குடிநீர் அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி, உடனுக்குட்ன் சரி செய்யும் பொருட்டு,வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி, பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்ட்டு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டியும், ஓப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

குடிநீர் அத்தியாவசியம் மற்றும் அவசியம் கருதி, மின் மோட்டர்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 286 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**<u>பொருள் எண்.8</u>**

இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டு வரப்பெற்ற வாகனங்களுக்கும்,ஆட்டோக்களுக்கும் தகுதிசான்று பெறுவதற்கும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும் பொதுநிதியில் இருந்து செலவுகள் செய்வதற்கு இந்நகர் மன்றம் தனது தீர்மானம் எண்:81 நாள்: 29.06.2022 அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் உள்ள வாகனம் TN76AX 1618 க்கு பழுதுபார்ப்பு பணிகள் செய்வதற்கும் அவசரஅவசியம் கருதி குறுகியகால விலைப்புள்ளி கேராப்பட்டதில் 09.03.2023 கீழ்கண்டவாறு விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ,எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | ஆர்.வி.ஆர் மோட்டார் ஒர்க்ஸ் | ரூ.106065.00 |
| 2 | நம்பி மோட்டர்ஸ் ஒர்க்ஸ் | ரூ.114550.00 |
| 3 | பிரபா மோட்டர்ஸ் ஒர்க்ஸ் | ரூ.109250.00 |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1 ல் உள்ள ஆர்.வி.ஆர் மோட்டார் ஒர்க்ஸ் அம்பாசமுத்திரம் என்பவரின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம் அவசரம் அவசியம் கருதி பொதுசுகாதாரம் பணிகள் பாதிக்கப்படாமலும், பொதுமக்களின் நலன் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் இந்நகர்மன்றம் அனுமதிக்கலாம்

**தீர்மான எண் : 287 / மன்றம் அனுமதி வழங்கப்பட்டது**

**ஓம்/-திரு.மா.செல்வசுரேஷ்பெருமாள்**

**நகர்மன்றத்தலைவர்**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி

This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/